**16.09.2020**

## பத்திரிக்கைச் செய்தி

## அரசினர் தோட்டம் மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்-B இல் உள்ள அண்ணா சுரங்கப்பாதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது

சென்னை அண்ணா சாலையில் அரசினர் தோட்டம் சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பழைய அண்ணா சுரங்கப்பாதை நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளது. சென்னையின் மிகப்பெரிய சுரங்கப்பாதையில் ஒன்றான பழைய அண்ணா சுரங்கப்பாதை அண்ணா சாலையில் உள்ள அறிஞர் அண்ணா சிலைக்கு கீழே அமைந்துள்ளது.

இப்போது உள்ள மெட்ரோ நுழைவு கட்டமைப்புகளின் அழகியலுடன் கிரானைட் தளம் அமைத்தல், சுவர் டைலிங், புதிய விளக்குகளுடன் சுரங்கப்பாதை புதுப்பிக்கப்பட்டுள்ளது. அரசினர் தோட்டம் மெட்ரோ இரயில் நிலைய பொதுத்தளத்திற்கு சுரங்கப்பாதை நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. வாலாஜா சாலை, எல்லிஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை மற்றும் அண்ணா சாலை ஆகிய இடங்களிலிருந்து பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் இந்த சுரங்கப்பாதையை பயன்படுத்தி மெட்ரோ இரயிலில் பயணிப்பதுடன், சாலையை எளிதில் கடக்கலாம்.

காதி பவன் மற்றும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஆகியவற்றையும் இந்த அண்ணா சுரங்கப்பாதை இணைக்கிறது. மெட்ரோ இரயில் நிலையத்திற்கு பயணிகளை வழிநடத்த அண்ணா சுரங்கப்பாதையின் நுழைவு வாயில் மற்றும் நடைபாதைகளிலும் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.